DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2022**

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 31- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | செல்லமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | தாய்முடி எஸ்டேட் U.D டிவிசன் | வயது | - | 63/2025 |
| சாதி | - | | | | |

**<u>31-07-2025</u>**

**(1-ம் எதிரி ஆஜரில்லை, 2-ம் எதிரி ஆஜர்)**

(1-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311-ன் கீழ் தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்.)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவ சமயத்தில் நான் நடத்தி வந்த கேண்டீனை முதன்முதலில் யார்நடத்தினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனக்கு முன்னால் சக்திவேல் என்பவர் நடத்திவந்தார். சக்திவேல் என்பவர் 1-ம் எதிரி சரத் என்பவரின் அப்பா என்றால் சரிதான். கேண்டீனில் சிகரெட் எந்த வயதுள்ளவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த சமயத்தில் எனக்கு தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5-ம் வகுப்பு படித்துள்ளேன். புகாரை நான் எழுதவில்லைஎன்றால் சரிதான். புகாரை யார் எழுதியது என்றால் தெரிந்த நபர் எழுதினார். நான் புகாரில்உள்ள விவரங்களை சொல்ல சொல்ல அவர் எழுதினார் என்றால் சரிதான். புகாரில் எனக்கு வயது 60 என உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா பெயர் செல்லமுத்து என்றால் சரிதான். கேண்டீனை எத்தனை வருடத்திற்கு ஒரு முறை ஏலம் விடுவார்கள் என்றால் ஏலம் விடமாட்டார்கள் ஒர்க்ஸ்கமிட்டியில் பொறுப்பில் உள்ளவர் கேண்டீனை ஒருவருக்கு கொடுப்பார். ஒர்க்ஸ்கமிட்டி பொறுப்பில் உள்ளவர் மாறினால் அடுத்து வருபவர் வேறொரு நபருக்கு கொடுத்தாலும் கொடுக்கலாம். அல்லது ஏற்கனவே கேண்டீனை நடத்துபவரேயே நடத்தசொல்லிவிட்டால் அவரே நடத்திக்கொள்ளலாம். நான் கேண்டீன் நடத்தும்போது ஒர்க்ஸ்கமிட்டி பொறுப்பில் இருந்தவர் எனது மாமா துரைராஜ் என்றால் சரிதான். தற்போது அந்த கேண்டீனை யார் நடத்துவது என்றால் சின்னப்பராஜ் என்பவர் நடத்தி வருகிறார். சக்திவேல் கேண்டீனை நடத்தும்போது ஒர்க்ஸ்கமிட்டியில் ஆசைத்தம்பி என்பவர் இருந்தார் என்றால் சரிதான். தற்போது யார் ஒர்க்ஸ்கமிட்டியில் இருப்பது

என்றால் அந்தோணிசாமி என்பவர் இருக்கிறார். நான் நடத்தும் கடைக்கும் சின்னஆஸ்பத்திரிக்கு எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 1 கி.மீ.துாரம் இருக்கும். பெரிய ஆஸ்பத்திரி எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் அரை கி.மீ.துாரம் இருக்கும். அந்த இரண்டு ஆஸ்பத்திரிக்கும் நான் முதலுதவி சிகிச்சைக்கு போகவில்லை என்றால் சரிதான். நான் வால்பாறை ஆஸ்பத்திரிக்கு வந்ததாக சொல்லும் வாடகை வண்டி யாருடையது என்றால் தெரியவில்லை. என்னை யார் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்சென்றது என்றால் அன்பு மற்றும் பாபு கூட்டிச்சென்றார்கள். உள்நோயாளியாக எத்தனை நாள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் அன்றைய தினம் இரவு முழுவதும் இருந்தேன். பின்பு வீட்டில் யாரும் இல்லை என்று சொன்னதால் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் எந்த தேதியில் யார் யார் சென்று புகார் கொடுத்தோம் என்றால் 07-11-2020-ம் தேதி மதியம் 03.30 மணி நானும், பாபு மற்றும் அன்பு ஆகியோர்கள் போனோம். 07-11-2020-ம் தேதிக்கு பின்பு புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சக்திவேல் எவ்வளவு நாட்கள் கேண்டீனை நடத்தினார் என்றால் தெரியாது. நான் எவ்வளவு நாட்கள் கேண்டீனை நடத்தினேன் என்றால் 5 வருடங்கள் நடத்தினேன். 5 வருடங்களுக்கு மேல் கேண்டீன் நடத்தமுடியாது என்றால் சரிதான். திரும்பவும்சக்திவேல் கேண்டீனை நடத்திவிடக்கூடாது என்பதற்காக சக்திவேல் மகனான எதிரி மீது தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக தவறாக புகார் கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.